# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**


ஊடக செய்தி 5 / 2020

நாள் : 15.04.2020

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.அன்பரசு மற்றும் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி**

# கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் அரசு ஊழியர்களின் சேவைகளும், தேவைகளும்!

## கொரோனா தடுப்புப் பணியில் அரசின் நடவடிக்கைகளை, உத்தரவுகளை விரைவாகச் செயல்படுத்த தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும் தயாராக உள்ளனர்!

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அறிவிப்பு!

### கொரோனாவின் பாதிப்பும், ஊரடங்கு நீட்டிப்பும்!

உலகம் முழுவதிலும் மனித குலத்திற்கு பெரும் சவாலாக எழுந்துள்ள கொரோனா வைரஸ் தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை இன்னும் வேகப்படுத்த வேண்டிய அவசியமும் அவசரமும் தமிழக அரசுக்கு எழுந்துள்ளது. 21 நாட்கள் ஊரடங்கு உத்தரவு முடியும் தருவாயில் இந்த நோயின் தாக்கமும் பரவலும் குறைந்தபாடில்லை. எனவே இதன் பாதிப்பு மேலும் பரவாமல் தடுக்கவும் மக்களை இந்நோயிலிருந்து காக்கவும் இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் ஊரடங்கு நீட்டிப்பு நிச்சயம் அவசியமானது என அனைத்துத் தரப்பினரும் கருத்து தெரிவித்துள்ள நிலையில் அரசாங்கம் அறிவித்துள்ள மேலும் மூன்றுவார ஊரடங்கு நீட்டிப்பை அர்த்தமுள்ள வகையில், கொரோனா வைரஸை மேலும் பரவாமல் கட்டுப்படுத்த உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகி உள்ளது.

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


## வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவது அரசின் கடமை!

அரசின் நிதிப்பற்றாக்குறை, மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணத் தொகைகளை அளிப்பதில் பாரபட்சம், காலதாமதம் செய்தல், நோய் தாக்கத்தை உடனடியாக கண்டுபிடிக்க உதவும் உபகரணங்களை தரவழைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் போன்றவை இந்த நோய்ப் பரவலை அதிகமாக்கிவிடுமோ என்ற கவலையை தமிழக மக்கள் மனதில் விதைத்துள்ளது. மறுபுறத்தில் ஏற்கெனவே 21 நாட்கள் வேலை வாய்ப்புகள் இன்றி தினக்கூலித் தொழிலாளர்களும் சிறு குறு வியாபாரிகளும் சொல்லொணாத இன்னல்களுக்கு ஆளாகியுள்ள நிலையில் இன்னும் மூன்று வாரங்கள் எவ்வித வருவாயும் இல்லாமல் அரசாங்கத்தின் கைகளை எதிர்பார்த்து கையேந்தி நிற்கும் நிலையில் உள்ள மக்களை அரசின் ஒரு சிறு தாமதமும் அவர்களின் பொறுமையின் எல்லைகளைத் தகர்தெறிந்துவிடும் என்பதை அரசு இயந்திரம் மறந்துவிடக்கூடாது. அரசின் குறைந்தபட்ச உதவிகளை பெற்றுக்கொண்டு இதுநாள் வரையில் மக்கள் இருந்தது அவர்களுக்கு இந்த சமூகத்தின் மீது உள்ள பொறுப்புணர்வாகவே இவ்வரசு காணவேண்டும். ஆனால், அதே மாதிரியான அணுகுமுறைகளை அரசாங்கம் மேலும் தொடராமல் தினசரிக் கூலிகள், தொழிலாளர்கள் போன்றோருக்கு வாழ்வாதாரத்தை தமிழக அரசு உறுதிபடுத்த வேண்டும்.

## கண்துஞ்சாமல் அயராது பணிபுரியும் ஊழியர்கள்!

கொரோனா நோய்த் தொற்றை மட்டுப்படுத்துவதிலும், நோயாளிகளை குணப்படுத்துவதிலும், ரத்தமாதிரிகளை எடுத்து சோதனைக்கு அனுப்புவதிலும், சோதனைகள் மேற்கொள்வதிலும், சோதனைகளின் முடிவுகளின் பேரில் நோய்த்தொற்று தாக்கப்பட்ட நபருடன் இருந்த வசித்த நபர்களை கண்டுபிடித்து தனிமைப்படுத்துவதிலும், அவர்களை வீட்டிலோ அல்லது தனியிடத்திலோ தங்கவைத்து சமூக விலகலைக் கடைபிடித்து 28 நாட்கள் பாதுகாப்பதிலும் மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவ தொழில்நுட்ப அதிகாரிகள், ஆய்வக தொழில்நுட்பனர்கள், மருந்தாளுனர்கள், பொது சுகாதாரத்துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்கள் (குறிப்பாக கிராம சுகாதார செவிலியர்கள்) ரத்தம் சேகரிப்பாளர்கள், மருத்துவமனை பராமரிப்பாளர்கள், ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள், காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், வருவாய்த் துறை ஊழியர்கள், ஊரக வளர்ச்சித்துறை, அங்கன்வாடி ஊழியர்கள், சத்துணவு மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஊழியர்கள், சமூகநலத்துறை, கூட்டுறவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை, வேளான் துறை உள்ளிட்ட இன்னபிற அத்தியாவசியத் துறை ஊழியர்கள் போன்றவர்களின் அயராத பங்களிப்பு இப்போதுள்ளதுபோல் இன்னும் முனைப்புடன் தொடர வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

ஆனால் தொடர்ச்சியான வேலைகளினால் மன உளைச்சலுக்கும், சோர்வுக்கும் ஆளாகியுள்ள அரசு ஊழியர்களில் ஒரு பகுதியினராகிய மேற்கண்டவர்களுக்கு ஓய்வும், சிறுவிடுப்பும் தரவேண்டும் என்று அரசாங்கம் நினைத்தாலும் அதை வழங்கமுடியாத நிலையில் கொரோனா தொற்று நாளுக்குநாள் அதிகரித்து வரும் நிலையில், அரசாங்கம் இப்போது சில நற்காரியங்களை செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண் : 46, நேரழத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


### தமிழக மருத்துவர்களை பாராட்டும் உலகம்!

மருத்துவர்கள் தங்களுக்கு மீறிய பங்களிப்பை இந்த நோயை வெல்வதற்காக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். கொரோனா தொற்று குறைப்பு நடவடிக்கைகளுக்காக மருத்துவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வரும் சீரிய தொண்டினை இந்த உலகமே பாராட்டும் நிலையில், சென்ற வருடம் அவர்கள் தங்கள் ஊதிய உயர்வுக்காக போராடியபோது அதை கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டதோடு மட்டுமல்லாமல் அவர்களை வேறு மாவட்டங்களுக்கு பணியிட மாறுதல் மற்றும் பதவி உயர்வினை ரத்து செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்கியதையும் இப்போது அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் மீதான வழக்குகள், பணியிட மாற்றங்கள் மற்றும் துறை ரீதியான நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசாங்கம் கைவிட்டு விட்டது என்ற அறிவிப்பு வரும்பட்சத்தில் அவர்களை மேலும் ஊக்கப்படுத்துவதாக அமையும். இது நடக்காவிட்டாலும் அவர்களுடைய பங்களிப்பு குறைந்துவிடப் போவதில்லை. ஆனால் உற்சாகம் குறைந்து விடும் என்பதில் ஐயமில்லை. அவர்களின் பணி சிறப்பானது என பாராட்டும் தமிழக அரசு, அவர்களை எதிரிகளாக பாவிக்காமல் இயற்கையின் தூதுவர்களாகக் கருதி அவர்களின் ஊதிய உயர்வு, பதவி உயர்வு மற்றும் பணியிட மாற்றம் ரத்து உள்ளிட்ட கோரிக்கைகளின் பேரில் நல்லதொரு முடிவெடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது.

### எம்.ஆர்.பி.செவிலியர்களின் அயராத பணி!

மருத்துவர்களுக்கு அடுத்ததாக எம்.ஆர்.பி. செவிலியர்கள் அரசாங்கத்தால் மதிக்கப்பட வேண்டியவர்கள். கொரோனா தொற்று ஏற்பட்ட நோயாளிகளுக்கு அருகிலிருந்து நோயாளிகளை தொட்டு பணி செய்யும் அவர்களுக்கு இந்த அரசாங்கம் எவ்வளவு செய்தாலும் தகும். இன்றைய நிலையில் அவர்கள்தான் தங்கள் இன்னுயிரையும் பொருட்படுத்தாது கொரோனா நோயாளிகளை கவனமுடன் பாவித்து வருகிறார்கள். அவர்கள் இந்த அரசாங்கத்திடம் தொடர்ந்து வலியுறுத்திவரும் ஒரே கோரிக்கை பணி நிரந்தரமும் கௌரவமான ஊதியமும். இந்த இருண்ட ஊரடங்கு காலகட்டத்தில் விளக்கேந்திய தேவதைகளாக மருத்துவப் பணி செய்யும் அவர்களை இப்போதாவது அரசாங்கம் தன்னுடைய நிரந்தரப் பணியாளர்களாக ஏற்றுக்கொண்டு மனித சமூகத்தின் சார்பாக நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

### தமிழகத்தை சுகாதாரமாகக் காக்கும் தூய்மைப் பணியாளர்கள்!

இந்த நாட்டை, மக்களின் சுகாதாரத்தை பாதுகாத்திடும் வகையில் தினசரி தெருக்களை, கழிவுகள் கொட்டப்பட்டிருக்கும் சாலைகளை, மருத்துவமனை கழிவுகளை எல்லாம் அப்புறப்படுத்தி சுற்றுப்புறத்தை சுத்தமாக்கும், நாம் யாரும் செய்ய யோசிக்கும் செயல்களை எல்லாம் செய்யும் தூய்மைப் பணியாளர்களை காண்டிராக்ட் பணியாளர்களாவே வைத்திருப்பது அரசாங்கத்தின் முகத்திற்கு அழகு சேர்க்காது. சென்னை உள்ளிட்ட நகரங்களை தூய்மை நகரமாக அழகிய நகரங்களாக பராமரித்து வரும் மாநகராட்சி ஒப்பந்த ஊழியர்கள் அதை தொடர்ந்து

பராமரிக்கவும் இன்னும் அழகுறச் செய்யவும் அவர்களையும் அரசாங்கத்தின் ஓர் உறுப்பாக மாற்ற வேண்டியது அவசியமாகும். ஒப்பந்த அடிப்படையில் பஞ்சாயத்து, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பணி செய்யும், தமிழகத்தின் தெருக்களையும், சாலைகளையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் தூய்மையாகவும் புலரச் செய்யும் துப்புரவுப் பணியாளர்களை, ''தூய்மைப் பணியாளர்கள்'' என்று வெறுமனே பெயர் மாற்றி அழைப்பதால் மட்டுமே அவர்களின் வயிறும், மனதும் நிறைந்துவிடாது. கடமையைச் செய்கிறார்கள் அவர்கள் என்று இல்லாமல் அவர்கள் வாழ்க்கைக்கு கவசமாக அவர்கள் செய்யும் பணி அமைய வேண்டும். எனவே அவர்கள் உடனடியாக நிரந்தர அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்தி கோரிக்கை வைக்கிறது.

**உலகிற்கே வழிகாட்டும் ஜெர்மனியையும் கேரளத்தையும் பின்பற்றுவோம்!**

ஐரோப்பிய யூனியனில் உள்ள ஜெர்மனியில் மற்ற நாடுகளைப் போலவே பல்லாயிரக்கணக்கான மக்கள் கொரோனா தொற்றுக்கு ஆளாயினர். ஆனால் ஜெர்மனியில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,295 மட்டுமே. அந்நாட்டு மக்கள் தொகையில் இதன் சதமானமானது 1.4%. இதுவே இத்தாலியில் 12%, பிரான்ஸ், ஸ்பெயின் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளில் 10%ஆக உயர்ந்திருந்தது. இதற்குக் காரணம் நோய்க்கிருமியின் மரபணுக்களை சீனா வெளியிட்ட உடனேயே அதை அடையாளம் காணும் சாதனங்களையும் வழிமுறைகளையும் ஜெர்மனி தயாரித்தது. ஜெர்மனியில் மருத்துவப் பரிசோதனையும் சிகிச்சையும் இலவசம் என்பதால் ஏழைகளும், வயதானவர்களும், தொழிலாளர்களும், வேலையில்லாதவர்களும்கூட தாமாகவே முன்வந்து பரிசோதனைகளை செய்து கொண்டனர்.

நோய் தொற்று ஏற்படாத பாதுகாப்பு உடையணிந்த மருத்துவர்கள் சளி, காய்ச்சல், இருமல் இருந்தவர்களின் வீடுகளுக்குச் சென்று சோதித்தனர். அவர்களில் கொரோனா அறிகுறி இருந்தவர்களை மருத்துவமனைகளில் சேர்த்துவிட்டனர். ஒரு புறம் பரிசோதனை முறைகளை தயாரித்து கொண்டிருந்த நேரத்தில் மறுபுறுத்தில் சிறப்புப் படுக்கைகளையும் ஒரு லட்சம் பேருக்கு 34 வென்டிலேட்டர்கள் என்ற விகிதத்தில் முதல் கட்டத்தில் தயாரித்தனர். எண்ணற்றவர்களுக்கு சிகிச்சைகளும், நோயின் அறிகுறி இருந்தவர்கள் குடும்பத்தினரை தனிமைப்படுத்தியும், சமூக இடைவெளியை பின்பற்றுபவதில் கண்டிப்பையும் காட்டினர். மக்களை வீட்டிலிருந்தவாறே அலுவலகப் பணிகளை மேற்கொள்ள அரசு பணித்தது. இப்படி அனைத்து வகைகளிலும் ஜெர்மனி ஒரு முழு அர்ப்பணிப்பு உணர்வோடு கொரோனாவை கட்டுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியதன் விளைவாக அந்நாட்டில் கொரோனா கட்டுப்படுத்தப்பட்டு இப்போது மட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

அதே போல நமது அண்டை மாநிலமான கேரளத்தில் ஆரம்பத்தில் அதிவேகமாக இருந்த நோய்த் தொற்று இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கேரள அரசு கொரோனா தொற்றை தடுப்பதில் மேற்கொண்ட நடவடிக்கைகளை உலக நாடுகளும், ஏடுகளும் பாராட்டுகின்றன. இன்று இந்தியாவிலேயே கொரோனா தொற்றின் தாக்கத்தைக் குறைத்த முதல் மாநிலமாக அதை

கட்டுக்குள் வைத்திருக்கும் அரசாக கேரள அரசாங்கம் உள்ளதை கருத்தில் கொண்டு அவர்கள் இந்த நோய்த் தொற்றைத் தடுப்பதில் பின்பற்றிய வழிமுறைகளை தமிழக அரசும் கேட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**பாதுகாப்பு உடைகளை வழங்குவதில் அரசின் கவனக்குறைவு!**

தமிழ்நாட்டில் ஜெர்மனி நாடும் மற்றும் கேரள மாநிலமும் மேற்கொண்ட ஏற்பாடுகளை காண்பது அபூர்வமாக உள்ளது. மருத்துவர்களுக்கு, செவிலியர்களுக்கு பாதுகாப்பு உடைகளை வழங்குவதில் கூட அரசு கவனக் குறைவாக உள்ளதாக ஊடகச் செய்திகள் வருகின்றன. பல அரசு மருத்துவர்களும், செவிலியர்களும், தூய்மைப் பணியாளர்களும் முகக் கவசம், கையுறைகள் மற்றும் பாதுகாப்பு உடை ஆகியவை இன்றி பணி செய்வதாக வரக்கூடிய செய்திகள் வருத்தமளிக்கச் செய்கின்றன. எனவே, தமிழக அரசு எந்த திசையிலிருந்தும் குறைபாடுகள் வராதவண்ணம் கொரோனா தொற்று தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அரசு மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், சுகாதார அலுவலர்கள், ஆய்வக தொழிற்நுட்பனர்கள் உள்ளிட்டு இக்காலத்தில் பணியில் ஈடுபட்டு வரும் அனைத்துத் தரப்பினரும் தங்கள் பாதுகாப்பு குறித்த அச்சமின்றி பணியாற்றும் சூழலை ஏற்படுத்த அவர்களுக்கு போதிய பாதுகாப்பு உடைகளை, உறைகளை, முகக் கவசங்களை அளித்து அவர்கள் நம்பிக்கையுடன் பணியாற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**விரைவு பரிசோதனை (Rapid Test) இல்லாத ஊரடங்கால் எந்தப் பயனும் இல்லை!**

ஊரடங்கு உத்தரவின் நோக்கம், ஊரடங்கு அமலில் உள்ள காலத்தில் அனைத்து மக்களுக்கும் கொரோனா தொற்று குறித்த பரிசோதனையை மேற்கொண்டுவிட வேண்டும் என்பதுதான். ஆனால் கடந்த 21 நாட்களில் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் குறைந்த எண்ணிக்கையில் இதற்கான பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கொரோனாவை ஒழிக்க அரசுகள் மேற்கொள்ள வேண்டிய முக்கிய நடவடிக்கைகளான தனிமைப்படுத்துதல், சமூக விலகல், அனைத்து மக்களுக்கும் கொரோனா தொற்று உள்ளதா என்பதை அறியும் மருத்துவப் பரிசோதனை ஆகியவையாகும். இவற்றில் மருத்துவப் பரிசோதனை மிகவும் இன்றியமையாததாகும் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ள நிலையில், தமிழகத்தில் நாம் அதற்கான பரிசோதனைகளை அதிகமாக செய்வதில் சிரமங்களை சந்தித்து வருகிறோம்.

ஏப்ரல் 9ஆம் தேதி தமிழகத்திற்கு ஐம்பதாயிரம் ரேப்பிட் டெஸ்ட் மருத்துவக் கருவிகள் சீனாவில் இருந்து வந்துவிடும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், இதுநாள் வரையில் வராததும் அக்கருவிகள் அமெரிக்காவிற்கு திருப்பி விடப்பட்டதாக வரும் செய்திகளும், மத்திய அரசாங்கம், ஒரே நாடு ஒரே சிகிச்சை என்ற கொள்கையில் அனைத்து மாநிலங்களும் மத்திய அரசின் சொல்படிதான் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


விதித்துள்ளதாக கூறப்படும் தகவல்களும் கொரோனோ தொற்றை தமிழகத்தில் அதிக அளவிற்கு பரவிவிடக்கூட சூழ்நிலையை ஏற்படுத்தி விடும் என்பதை தமிழக அரசு உணர்ந்து, உடனடியாக தமிழகத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களுக்கு ரேபிட் டெஸ்ட் எடுக்கும் நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், இந்த நேரத்தில் ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறும் அனைத்து நபர்களின் கருத்துக்களையும் பரிசீலித்து 'ஈகோ' பார்க்காமல் அவற்றில் உள்ள நல்லவற்றை எடுத்து அதற்கு உடனடி செயல்வடிவம் கொடுத்து அனைவரோடும் சேர்ந்து இந்த கொரோனா தொற்றை ஒழிக்கும் நடவடிக்கைகளில் தமிழக அரசு ஈடுபட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

## இப்போதைய தேவை மக்களுக்கான அரசியல்!

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு அதிலும் அரிசி கார்டு உள்ளவர்களுக்கு மட்டுமே ரூ.1000/- வழங்கியுள்ள நிலையிலும், பதிவு செய்து கொண்ட தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.1000/- கொடுப்பதாக செய்துள்ள அறிவிப்பினாலும், சாலையோரம் இருப்போர், யாசகம் பெறுவோர், வேலையற்றிருக்கும் தினக்கூலிகள் போன்றோர் கடும்பசிக் கொடுமைக்கு ஆளாகியுள்ளனர். இத்தகைய நபர்களுக்கு இலவச உணவுப் பொட்டலங்களை வழங்கும் தன்னார்வலர்கள், அரசியல் கட்சியினரின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தும் வகையில் அரசாங்கம் தவிர வேறு எவரும் உதவி பொருட்கள் வழங்கக் கூடாது என அறிவிப்பு வெளியிட்டு அதற்கு எதிர்ப்புக் குரல்கள் ஓங்கி ஒலித்த பின்னர் அதை மாவட்ட ஆட்சியர்கள், மாநகராட்சி மற்றும் நகராட்சி அதிகாரிகளின் அனுமதியுடன் வழங்க அனுமதித்துள்ளதை பொதுமக்கள் அருவெறுப்புடன் பார்க்கிறார்கள். இந்த யோசனை அரசுக்கு முன்னமேயே வராதது துரதிருஷ்டவசமான செயலாகும். பசிக்கு உணவளிப்பவர்களால் சமூக விலகல் பாதிக்கப்படுகிறது எனக் கூறும் அரசாங்கம் அதை காவல்துறையினர் உதவியோடு வழங்கி சமூக விலகலை பாதுகாத்திட வழிவகை செய்திட வேண்டும். அதைவிடுத்து பசியாற்றல் உதவி செய்யும் தன்னார்வலர்களை தடுத்திட முனைவது அரசின் காழ்ப்புணர்ச்சியை காட்டுவதாக அமைந்துவிடும். இந்த நேரத்தில் அரசியல்வாதிகள் அனைவரும் தங்களுக்காக அரசியல் செய்வதை விட்டு வெளிவந்து மக்களைக் காக்கும் அரசியலை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## முழு ஒத்துழைப்பு நல்க பிறதுறை அரசு ஊழியர்களும் தயார்!

தமிழக அரசின் அத்தியாவசியத் துறைகளில் பணிபுரியும் பெரும்பாலான ஊழியர்களைத் தவிர்த்து பிறதுறை ஊழியர்கள் ஊரடங்கிற்கு ஒத்துழைக்கும் வகையில் வீட்டில் இருந்து, சமூக இடைவெளியை பராமரிக்கும் நிலையில், தமிழக அரசு கேட்டுக் கொண்டால் இதர துறைகளில் பணியாற்றும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், அரசாங்க ஊதியம் பெறும் இதர பணிப்பிரிவினரும் கொரோனாவிற்கு எதிரான அரசின் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்க தயாராக இருக்கிறோம் என்று இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். கொரோனா தொற்றை ஒழிக்க முன்வரிசையில் நிற்கும் அனைத்துத் தரப்பினருக்கும் உதவிட அரசு ஊழியர்கள்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

தயாராகவே உள்ளனர். அவர்களை தன்னார்வலர்களாகவோ, கொரோனா நோய்த்தொற்று சம்பந்தப்பட்ட இதர பணிகளுக்காகவோ அரசு உபயோகப்படுத்திக் கொள்ள முன்வரும் நிலையில் அரசு ஊழியர்களாகிய நாங்கள் எங்கள் பங்களிப்பை அரசுக்கு வழங்கத் தயாராக உள்ளோம்.

**அரசு ஊழியர்களின் தொடர் பிரச்சாரம்!**

ஏற்கெனவே அரசு ஊழியர்கள் அனைவரும் அவரவர் பகுதிகளில் கொரோனா வைரஸ் மேலும்மேலும் பரவாமல் தடுக்க அரசாங்கம் சொல்லும் வழிமுறைகளை அவர்களுடைய நண்பர்கள், உறவினர்கள், அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் தவறாமல் கடைபிடிக்கிறார்களா என்பதை கண்காணித்து அவர்கள் அத்தகைய வழிமுறைகளை கடைபிடிக்க வலியுறுத்தி வருகிறோம். வீட்டை விட்டு வெளியில் வராமல், கும்பல் கூடாமல் தனித்து இருக்க தங்கள் பகுதி பொதுமக்களுக்கு அரசு ஊழியர்கள் தத்தமது பகுதிகளில் விளக்கி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். மேலும், பொதுமக்கள் தங்கள் அடிப்படை தேவைகளுக்கான பொருட்களை வாங்குவதற்காக வெளியே வருவதைத் தவிர சில நாட்களுக்கு சுயகட்டுப்பாடுடன் தனித்திருக்க அலைபேசி மூலமாகவும், குறுஞ்செய்திகள் வாயிலாகவும் தொடர்ந்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறோம். இந்நிலையில் அரசு ஊழியர்களை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொள்வதன்மூலம் கொரோனாவை தடுக்க ஆக்கபூர்வமான வழிவகைகளை நாம் உறுதி செய்ய முடியும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மத்திய அரசின் கொரோனா காப்பீட்டுத் திட்டம், கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள மாநில அரசு ஊழியர்கள் அனைவருக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும்!**

மத்திய அரசு கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைளில் ஈடுபடும் மத்திய அரசு ஊழியர்களுக்கு தலா ரு.50 லட்சம் வீதம் காப்பீடு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மத்திய அரசின் அடியொற்றி அப்படியே செயல்படுத்தி வரும் தமிழக அரசு அத்தகைய காப்பீட்டுத் திட்டத்தை வெறும் ரூ.2 லட்சத்திற்கு அதுவும் மருத்துவர்களுக்கு மட்டுமே ஏற்படுத்தியிருப்பதாக தெரிவித்திருப்பது அறம் சார்ந்த செயலாக தெரியவில்லை. கொடூரமான ஒரு காலகட்டத்தில் கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் மனித இனம் நடத்தும் போராட்டத்தில் முன்வரிசையில் அதிகபாதிப்புகளுக்கு ஆளாகக் கூடியவர்களாக நிற்கும் ஒவ்வாரு ஊழியரும் அவர்தம் இன்னுயிரும் தியாக வரலாற்றை ஏற்படுத்துவனவாகும். தமிழக அரசு அவர்களில் பேதம் பிரித்து அவர்களின் உயிர்களுக்கு மதிப்பீடு செய்வது என்பதானது அறிவார்ந்த செயலாக இருக்காது. எனவே தமிழக முதல்வர் அவர்கள் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் தங்கள் இன்னுயிரை பணயம் வைத்து கடமையாற்றும் மருத்துவர்களுக்கு காப்பீடு திட்டத்தை அறிவித்துள்ளதை வரவேற்கும் அதே நேரத்தில் அந்த காப்பீட்டுத் தொகையானது மத்திய அரசு அறிவித்துள்ள ரூ.50 லட்சத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும் என்றும், அது மருத்துவர்களுக்கு மட்டுமேயல்லாமல் மருத்துவர்கள் உள்ளிட்ட கொரோனா நோய்த்தொற்று தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

**சிறப்பூதியத்தில் பாரபட்சம் காட்டுவது சிறப்பான சேவையை சிதைத்துவிடும்!**

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் மருத்துவர்கள் செவிலியர்கள் காவல்துறையினர் உள்ளிட்ட அனைத்து அரசு ஊழியர்களும், மிகசிறப்பாக செயல்படுகின்றனர் என தமிழக முதல்வரே சான்றளித்த பின்னர், அவர்களுக்கான சிறப்பூதியத்தில் பாரபட்சம் காட்டுவது அவர்களின் அர்ப்பணிப்பான கடமையுணர்வை மறைத்திடும் செயலாக அமைந்துவிடும். எனவே மருத்துவர்களுக்கு ஒரு மாதம் சிறப்பூதியத்தை தமிழக முதல்வர் அறிவித்தது போல் செவிலியர்கள், ஆய்வக தொழில்நுட்பனர்கள், மருத்துவ ஊழியர்கள் உள்ளிட்ட கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கி அவர்களின் பணியையும் கண்துஞ்சா சேவையையும் ஊக்கப்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**பாதுகாப்பு உபகரணங்களும், போக்குவரத்து வசதிகளும் கொரோனா பணியில் ஈடுபடும் அரசு உழியர்களுக்கு இன்றியமையாதவை!**

அரசு ஊழியர்கள் அலுவலகம் சென்று பணி செய்யவும், கும்பல் கூடாமல் பணி செய்வதை உறுதிப்படுத்தும் வகையில் ஷிப்ட் அடிப்படையில் பணி செய்யவும் தயாராகவே இருக்கிறோம். ஆனால், அப்படி பணிக்கு வரும் அரசு ஊழியர்களுக்கு அரசாங்கம் உரிய பாதுகாப்பு உபகரணங்களை வழங்கி அரசு ஊழியர்களுக்கு தொற்று பரவாதிருக்க போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேசமயம் தற்போதுள்ள சூழ்நிலையில் ஊழியர்கள் அரசு அலுவலகம் செல்ல போக்குவரத்து வசதி இல்லாத நிலையில் அவர்கள் பாதுகாப்புடன், சமூக இடைவெளி கடைபிடித்து அலுவலகம் சென்றுவர தகுந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்தி தர வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறது. மேலும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு பணியில் இருக்கும்போது இறக்க நேரிடும் நேர்வுகளில் ரூ.10 லட்சம் நிவாரண நிதி வழங்கப்படும் என்ற அறிவிப்பை வரவேற்கும் அதே நேரத்தில் பாரபட்சம் காட்டாமல் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் அனைவருக்கும் விரிவுபடுத்தி முதல்வர் அறிவித்திட வேண்டுமெனவும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள.

**(மு.அன்பரசு)**
மாநிலத் தலைவர்

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்